பாடம்-1

**Bi** (2) பழைய ஏற்பாட்டு பாடம்**Bi**(2)-1 சிருஷ்டிப்பு (ஆதி1.1-2:3)

இன்றைய பாடத்தில் தேவனே எல்லாவற்றிற்கும், விசேஷமாக நன்மையானவைகள் எல்லாவற்றிற்கும் அவரே மூலக் காரணர் என்பதைப் பற்றி படிக்க இருக்கிறோம். தேவனுடைய கிரியையினாலே தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவனுடைய வார்த்தையினால் தான் எல்லாமே சிருஷ்டிக்கப்பட்டது என்பதை இந்த பாடம் நமக்கு விளக்குகிறது. அவருடைய வார்த்தையினாலே எல்லாம் உண்டாயிற்று. எல்லாம் உருவாவதற்கு முன்பதாகவே தேவன் இருந்தார்.

கடந்த காலத்தின் நித்தியத்திலிருந்து, வருங்காலத்தின் நித்தியம் வரைக்கும் தேவன் இருக்கிறார் நித்திய, நித்தியமாக அவரே தேவன். வேதத்தின் முதலாம் புத்தகத்தில் உள்ள சிருஷ்டிப்பின் வரலாறு தெய்வத்துவத்தின் மூன்று வித்தியாசமான நபர்களை புரிந்து கொள்ளும்படி நமக்கு உதவி செய்கிறது. திரித்துவம் என்பது மூவராய் இருந்தாலும் அவர்கள் ஒருவரே. தேவன் ஆவியாக இருக்கிறார். வேதம் சொல்கிறது, ஆதியிலேயே தேவனுடைய ஆவியானவரின் பிரசன்னம் இருந்தது. எனவே ஏசு என்கிற வார்த்தை சிருஷ்டிப்பின் மூலக்காரணமாய் இருந்தது.

அப்போஸ்தலனாகிய யோவான் அதை இவ்விதமாக விளக்குகிறார், “ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவரேயல்லாமல் உண்டாகவில்லை.” எனவே இயேசு என்கிற வார்த்தை சிருஷ்டிப்பின் மூலக்காரணம். சிருஷ்டிப்பின் வரலாறு பரலோகத்திலிருந்தல்ல, பூமியிலிருந்து பார்த்தது போல சொல்லப்பட்டிருக்கிறது. அது தேவனுடைய கிரியைகளையும், சிருஷ்டிப்பின் மதிப்பையும் குறிக்கோளாய் கொண்டிருக்கிறது.

சிருஷ்டிப்பின் சமயத்திலே யாரும் அங்கே இல்லாததினாலே, ஆதியாகமத்தை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே மோசே எழுதினவைகளைத் தான் நாம் சரி என்கிறோம். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஜீவனற்றதாய்,

வெறுமையாகவும், இருளாகவும் இருந்தது. வெறுமையான பூமியின் மேல் தேவ ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். தேவன் சொன்ன முதலாவது காரியம் ‘‘வெளிச்சம் உண்டாகக் கடவது’’ திடீரென வெளிச்சம் பூமியெங்கும் பிரகாசித்தது! தேவன் வெளிச்சத்தைப் பார்த்து, “அது நல்லது” என்று சொன்னார். வெளிச்சதையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். தேவன் வெளிச்சத்துக்கு பகல் என்று பெயரிட்டார், இருளுக்கு இரவு என்று பெயரிட்டார். எனவே தேவன் முதலாம் நாள் பகலையும், இரவையும் வார்த்தையினால் உருவாக்கினார்.

இரண்டாம் நாளிலே தேவன் ஜலத்தைப் பார்த்து “நீ பிரியக்கடவாய்” என்றார். உடனடியாக ஜலம் பிரிய ஆரம்பித்தது. சில ஜலம் ஆகாயத்திலே சேர்ந்தது, மீதியானது பூமியிலே இருந்தது. தேவன் மேலேயிருக்கிற ஜலத்தையும் கீழே இருக்கிற ஜலத்தையும் பார்த்தார். இவைகள் இரண்டிற்கும் நடுவே இருக்கிற இடத்தைப் பார்த்து, “நான் உன்னை வானம் என்றழைக்கிறேன்’’ என்றார்

மூன்றாம் நாளிலே தேவன் வானத்திற்கு கீழிருக்கிற ஜலத்தினை கண்ணோக்கினார். பின்னர் தேவன் “நீங்கள் சமுத்திரத்திலும், நதிகளிலும் குளங்களிலும் ஒரிடமாய் சேருங்கள், வெட்டாந்தரை காணப்படவுங்கடவது” என்றார். அவருடைய வார்த்தையின்படியே ஜலத்திலிருந்து பூமி எழும்பினது. நதிகள் பூமியின் மேல் பாய்ந்தது. மலைகள், பள்ளத்தாக்குகள் பிரிந்தன. ஆங்காங்கே குளங்களும் சமுத்திரமும் உண்டாயிற்று. தேவன் வெட்டாந்தரையையும் சமுத்திரத்தையும் பார்த்து “இது நல்லது” என்று சொன்னார். பின்பு தேவன் பூமியைப் பார்த்து, “புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளை, தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது” என்றார். உடனடியான பூமியெங்கும் செடிகள் முளைக்க ஆரம்பித்தன. அங்கே புல், பூக்கள், காய்கறிகள் உண்டாயின. அநேக விதவிதமான மரங்கள் உண்டாயின. அவைகளில் சில உயரமாகவும் மற்றவை குள்ளமாகவும் இருந்தது. அவைகள் பல விதமான கனிகளை கொடுத்தன. இவைகள் எல்லாம் அந்த நாள் முதற்கொண்டு பூமியில் விளைந்து அதிலே விதைகள் இருந்ததினால் தொடர்ந்து அவைகள் வளர்ந்து கொண்டே இருந்தது.

எனவே மூன்றாம் நாள் தேவன் வெட்டாந்தரையையும், செடிகளையும், மரங்களையும் உண்டாக்கினார்.

நான்காம் நாளிலே தேவன் வானத்தைப் பார்த்து “சுடர்கள் உண்டாகக் கடவது” என்றார். பகலை ஆள பெரிய சுடரும், இரவை ஆள சிறிய சுடரும் உண்டாயின. அவைகள், “பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், அடையாளங்களுக்காகவும், காலங்களையும், நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது” என்றார். உடனடியாக சூரியன் வானத்திலே பிரகாசிக்க ஆரம்பித்தது வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் பூமிக்குக் கொடுத்தது. சந்திரனும், நட்சத்திரங்களும் இரவை நேர்த்தியான ஒளியால் நிரப்பின. தேவன் சூரியனையும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் பார்த்து “நல்லது” என்றார்.

ஐந்தாம் நாளிலே தேவன் ஆகாயத்தையும், சமுத்திரத்தையும், குளங்களையும், ஓடைகளையும் அதற்கு கீழ் இருக்கிறவைகளையும் பார்த்தார். பின்னர் ” ஜீவன் உண்டாகக்கடவது, ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளும், தண்ணீரிலே நீந்தும் ஜீவஜந்துக்களும் உண்டாகக்கடவது” என்றார். உடனடியாகவே, நீந்துபவைகள் சமுத்திரத்திலும், குளங்களிலும் நதிகளிலும் உண்டாயின. சில பெரியனவாகவும், சில சிறியனவாகவும் இருந்தது. வித விதமான வண்ணமுள்ள, வடிவமுள்ள மீன்கள் தோன்றின. வானத்திலே பறவைகள் தோன்றின. சில ஆகாயத்திலே உயரமாக பறந்தன. சில பூமியிலே தாழ்வாக பறந்தன. அவைகள் வித்தியாசமான வடிவம், நிறம் மற்றும் சத்தத்துடனும். காணப்பட்டன. தேவன் பறப்பன, ஊர்வன, நீந்துவன எல்லாவற்றையும் நல்லது என்று கண்டார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, “நீங்கள் பலுகிப் பெருகி சமுத்திரத்தையும் ஆகாயத்தையும் நிரப்புங்கள்” என்றார்.

ஆறாம் நாளிலே தேவன் பூமியைப் பார்த்து, “ஜீவஜந்துக்களை பிறப்பிப்பாயாக” என்றார். “காட்டு மிருகங்களும், நாட்டு மிருகங்களும், உண்டாவதாக” என்றார். உடனடியாக மிருகங்கள் உருவாகி பூமியில் நடமாட துவங்கின. அவைகளில் சில மிகப் பெரியனவாகவும், சில மிகச் சிறியனவாகவும் இருந்தன. தேவன் அவைகளைப் பார்த்து நல்லது என்று கண்டார். பின்பு

தேவன் "நாம் மனுஷரை நமக்கு பிள்ளைகளாக உண்டாக்குவோம்" என்றார். அவர்களை தம்மைப் போலவே உண்டு பண்ணினார். அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் மனுஷனையும் மனுஷியையும் உண்டாக்கி, "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று ஆசீர்வதித்தார். அவர் உண்டாக்கின எல்லாவற்றையும் ஆளுகை செய்யுங்கள் என்றார். அவர் அவர்களுக்கு பழங்கள், தானியங்கள், காய்கள்,பசுமையான தாவரங்களை ஆகாரமாக கொடுத்தார். தேவன் இவைகளை எல்லாம் பார்த்து "மிகவும் நல்லது" என கண்டார்.

ஏழாம் நாளிலே தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தார். அவர் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதை விசேஷமாக்கினார். இவ்விதமாக தேவன் வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணி எல்லா ஜீவராசிகளையும் படைத்தார்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் தேவனே எல்லாவற்றையும் படைத்தவர் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. முதலாவது, தேவன் பூமியைப் படைத்தார். அவருடைய வார்த்தை ஜீவனற்ற, இருளான வெறுமையிலிருந்து, வெளிச்சத்தையும், ஒழுங்கையும் ஜீவனையும் கொண்டு வந்தது. கடைசியாக அவர் மனுஷர்களை உருவாக்கினார். தன்னுடைய சொந்த ரூபத்தின் படியும், சாயலிலும் நம்மை உருவாக்கினபடியால் நம்முடைய பரம தந்தையோடு பிள்ளைகள் என்கிற உறவை நாம் அனுபவிக்க இவை எல்லாவற்றையும் மிகுந்த அன்போடு செய்தார்.

இந்த பாடம் நமக்கு சொல்லி கொடுக்கிற முக்கிய சத்தியம் என்னவென்றால், தேவன் தன்னுடைய பிள்ளைகள் வாழ்வதற்கான பூரணமான இடத்தை உருவாக்கினார். எனவே அவர்கள் தங்களுக்கு வேண்டிய விருப்பமான எல்லாவற்றிற்காகவும் தேவனையே சார்ந்திருக்க வேண்டும்.

இந்தப் பாடத்தை திரும்பிப் பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிப்போம்.

1.இந்த முழு உலகத்தையும் அவைகளில் உள்ளவைகளையும் தேவனுடைய எந்த செயல் உருவாக்கினது? (6 வினாடிகள்

நிற்கவும்) ‘‘தேவன் பேசினார், இந்த உலகம் உண்டானது’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2.சிருஷ்டிப்பின் ஏழாம் நாள் எதனால் முக்கியமானது? (6 வினாடிகள் தாமதிக்கவும்) ‘‘தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அந்த நாளிலே தேவன் ஓய்ந்திருந்தார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. தான் செய்து முடித்த எல்லாவற்றையும் பார்த்து தேவன் எப்படி உணர்ந்தார்? (6-வினாடிகள் தாமதிக்கவும்) “மிக மிக நல்லது” என்று தேவன் சொன்னார், என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

உங்களுக்கான வீட்டுப்பாடம். இந்தப்பாடத்தை 3 முறையாகிலும் கவனித்து கேளுங்கள். ஒவ்வொரு முறை கேட்கும் போதும் அது எவ்வாறு நடந்திருக்கும் என கற்பனை செய்து பாருங்கள். அதை உங்கள் மனதில் காட்சிகளாக்கி பாருங்கள். பின்னர் பாடத்தை உங்கள் சொந்த வார்த்தையில், உங்கள் ஞாபகக் குறிப்புகளின்படி மற்றவர்களுக்கு விளக்கி கூறுங்கள். இது உங்களுக்கு தேவனின் படைப்புகளின் வரிசைகளை ஞாபகப்படுத்திக் கொள்ள உதவியாய் இருக்கும். படைப்பின் முதல் மற்றும் 4-ம் நாள் பகல் மற்றும் வெளிச்சத்தை பற்றியது: 2-ம் மற்றும் 5-ம் நாட்கள் ஜலம் பிரிந்ததும் அதில் உருவானவைகளையும் பற்றியதுமானது, 3 மற்றும் 6-ம் நாட்கள் பூமி மற்றும் அதின் மேல் படைக்கப்பட்டவைகளையும் பற்றியது. ஏழாம் நாள் தேவன் ஓய்ந்திருந்தார். இப்படி பாடத்தை நீங்கள் திரும்ப கூறுமளவுக்கு கவனித்து கேளுங்கள்.

பின்னர் நீங்கள் படைப்பின் செயல்களை சரியாக கூறுகிறீர்கள் என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள் குறைந்தது 45-நிமிடங்களாவது ஒதுக்கி இந்த பாடத்தை கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் திரும்ப இந்த பாடத்தை கூறும் பொழுது அதை சரியாக சொல்கிறீர்களா என்பதை வேறு ஒருவர் மூலமாக சரிபார்த்து கொள்ளுங்கள். இந்த பாடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளை நீங்களும் உங்கள் நண்பரிடம் கேளுங்கள்.

இறுதியாக, இந்த பாடத்தை இதுவரை கேட்டறியாத ஒருவரிடம் விளக்கிக்கூறுங்கள். அந்த நண்பர் அவருடைய வாழ்க்கை இருளாகவும், ஒழுங்கின்மையாகவும் இருப்பதாக உணர்பவராக கூட

இருக்கலாம். அவருடைய வாழ்க்கையிலும், தேவன் ஒளியையும், சமாதானத்தையும் கொண்டு வர விரும்புகிறார் என்ற நல்ல செய்தியை பகிர்ந்து கொள்ளுங்கள்.

பாடம்-2**B-[2]**பழைய ஏற்பாடு **B-[2]-2** ஆதாமும் ஏவாளும் (ஆதி-2)

முதல் மனுஷனும், முதல் மனுஷியும் எப்படி வந்தார்கள் என்று இன்றைய பாடத்தில் கற்றுக் கொள்ளப் போகிறோம். ஆதாமும், ஏவாளும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும்படி சிருஷ்டிக்கப்பட்டவர்கள். அவர்களுடைய முதல் வீட்டைப்பற்றியும் நீங்கள் பார்க்க இருக்கிறீர்கள். இன்றைக்கு உலகத்திலே வாழ்கின்ற எல்லோருக்கும் அவர்களே பெற்றோர். தேவன், முதல் தம்பதிகள் பின்பற்றும்படி ஒரே ஒரு கட்டளையைத் தான் கொடுத்தார். அவர்களை மிகவும் நேசித்தாலும், அவர்களோடு நல்லுறவு இருப்பதற்காகவும் தேவன் இதைச் செய்தார்.

பூமி புதியதாய் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். எல்லாம் அழகாகவும், நேர்த்தியாகவும் இருந்தது. அந்த நாட்களில், தேவன் இன்னும் பூமியில் மழையைப் பெய்யப் பண்ணவில்லை. அதற்கு பதிலாக, மூடுபனி பூமியிலிருந்து எழும்பி பூமியை நனைத்தது. தேவன் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டு பண்ணினார். அது ஈராக் பட்டணத்தில் இருப்பதாக சரித்திர வல்லுநர்கள் நம்புகிறார்கள். அதிலே எல்லாவிதமான மரங்களும் இருந்தன. அந்த தோட்டத்தின் வழியாக ஒரு நதியும் பாய்ந்தது.

அதன் நடுவில் இரண்டு விசேஷித்த மரங்கள் இருந்தன. அதிலே ஒன்று ஜீவவிருட்சம். மற்றொன்று நன்மை, தீமை அறியத்தக்க விருட்சம். தேவன் அந்த தோட்டத்திலே எல்லா விதமான மிருகங்களையும் செடிகளையும் வைத்தார். தேவன் உண்டாக்கின எல்லாவற்றையும் வைப்பதற்கான மிகப் பெரிய இடமாக அது இருந்தது. பின்பு தேவன் பூமியிலிருந்து மண்ணை எடுத்து அதை முதல் மனிதனாக உருவாக்கினார். ஜீவசுவாசத்தை

அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். தேவன் அவனுக்கு ஆதாம் என்று பெயரிட்டார். தேவன் ஆதாமை தோட்டத்திலே வேலை செய்யவும் அதை காக்கவும் வைத்தார். மரங்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும், அதின் கனிகள் புசிப்பதற்கு ஏற்றதாகவும் இருந்தது.

ஆனால் தேவன் “நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியைப் புசிக்கலாம், நடுவில் காணப்படுகிற நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம். நீங்கள் அதைப் புசித்தால் சாகவே சாவீர்கள்” என்றார். பின்பு தேவன் சகல மிருகங்களையும், பறவைகளையும் ஆதாமினிடத்தில் கொண்டு வந்து பெயரிடச் சொன்னார். அவை எல்லாவற்றையும் கவனித்து பார்த்து எல்லா ஜீவராசிகளுக்கும் பெயரிட்டான்.

அவன் அவைகளுக்கும் பெயரிடும் போது கவனித்துப் பார்க்கையில் அவைகள் ஆணும் பெண்ணுமாக ஜோடி - ஜோடியாக அவனிடத்தில் வந்தன. அவன் சுற்றிலும் பார்த்தான். அவனுக்கோ ஏற்ற பெண் துணை காணப்படவில்லை. பின்பு தேவன் “மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, எனவே நான் அவனுக்கு ஏற்ற நல்ல ஜோடியை, சரியான துணையை ஏற்படுத்துவேன்” என்றார். தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதில் இருந்து கவனமாக மனுஷியை உருவாக்கினார். ஆதாம் கண்விழித்த போது தேவன் மனுஷியை அவனிடத்தில் கொண்டு வந்தார். ஆதாம் மிகவும் ஆச்சரியத்தோடு, “இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள்'' என்றான்.

இதினிமித்தம் தேவன் “மனுஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள். இவர்கள் இருவராயிராமல் ஒருவராய் இருப்பார்கள். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்” என்றார். (மாற் 10.6-9) ஆதாம், ஏவாள் இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள். தேவன் மனுஷர் வாழ்வதற்கான ஏற்ற இடத்தை ஏற்படுத்தினபடியால்

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானது. ஆதாமையும், ஏவாளையும் மையப்படுத்தி இது எழுதப்பட்டிருக்கிறது, இதிலே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும், கீழ்ப்படியாமல் இருப்பதற்கும் தங்களுக்கு விருப்பமானதை தேர்வு செய்ய வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. கடந்த பாடத்திலே, தேவனுக்கு பூமியுடன் இருக்கிற உறவைக் குறித்து கற்று கொண்டோம். இந்த பாடம் மனுஷனுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள உறவைப்பற்றி தெரிவிக்கிறது.

தேவன் மனுஷர்களுக்கு, மிருகஜீவன்களைப் பார்க்கிலும் வித்தியாசமான வாழ்க்கையை கொடுத்தார். ஏனென்றால் அவர் ஆதாமையும், ஏவாளையும் தன்னைப் போலவே படைத்தார். அவர் மனுஷனையும், மனுஷியையும், தன்னை பிரதிபலிக்கும்படி வைத்தார். தேவனுக்குள் ஆணென்றும், பெண்ணென்றும் இல்லை. அப்படியே ஆதாமும் ஏவாளும் தேவனுடைய குணாதிசயங்களோடு படைக்கப்பட்டிருந்தனர். இருவரும் தேவ சாயலில் படைக்கப் பட்டவர்கள். தேவன் ஆவியாயிருக்கிறார், எனவே எல்லா ஜீவன்களுக்கும் அவரே உன்னதர். நீங்கள் “தேவனுடைய திட்டம்” என்கிற பாடத்தைப் படிக்கும் போது அவருடைய பெயர் மற்றும் அவருடைய சுபாவத்தை குறித்து கற்றுக் கொள்வீர்கள்.

இந்த பாடம் நமக்கும் கற்றுத் தருகிற முக்கிய சத்தியம் என்னவென்றால் தேவன் நேசிப்பதற்கு அவருக்கு பிள்ளைகள் வேண்டும். அவர்களும் அவரை திரும்ப நேசிக்க வேண்டும். ஆதாமும், ஏவாளும் வாழ்வதற்கு ஏற்ற இடத்தை உண்டாக்கி, அவர்கள் தங்கள் அன்பையும் உண்மையையும் தேவனுக்கு காண்பிக்க வேண்டும் என்று விரும்பினார்.

இந்தப் பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. தேவன் செய்த எந்த காரியம் ஆதாமுக்குள் ஜீவனைக் கொண்டு வந்தது? (6-விநாடிகள் தாமதிக்கவும்)

“அவன் நாசியிலே சுவாசத்தை ஊதினார்” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்

2.தேவன் ஆதாமுக்கு விலக்கி வைத்த மரத்தின் பெயர் என்ன? (6-விநாடிகள் தாமதிக்கவும்)

"நன்மை தீமை அறியத்தக்க மரம்." என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. மனிதன், ஏன் தகப்பனையும் தாயையும் பிரிய நேரிடுகிறது? (6-விநாடிகள் தாமதிக்கவும்) "மனிதன் தன் மனைவியோடு இசைந்து புதிய குடும்பத்தை உருவாக்க வேண்டும் என்று தேவன் விரும்பினதால்" என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில் (மாற்கு 10:7,ல் பாருங்கள்)

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள். கடைசியாக இதைப் பற்றி கேட்டிராத ஒரு நண்பருக்கு இந்த பாடத்தை சொல்லுங்கள். இதைச் சொன்ன பிறகு உங்கள் நண்பருக்கும், தேவனுக்கும் உள்ள உறவைப்பற்றி கேளுங்கள். அவர்களோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

பாடம் முடிந்தது

பாடம்-3

## கீழ்ப்படியாமை **Bi [2] Old Testament**.(ஆதி.3)

இன்றைய பாடத்தில் நீங்கள் மனிதர்கள் எவ்வாறு தேவனை விட்டு விலகி போனார்கள் என்பதை பற்றி கற்றுக்கொள்ள இருக்கிறீர்கள். அவர்கள் சாத்தான் கூறிய பொய்யை நம்பி அன்பின் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். அவர்கள், கீழ்ப்படியாத நேரத்திலும் இயேசுவின் வருகையை குறித்த முதலாம் வாக்குத்தத்தத்தை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள்.

எல்லாம் மிகவும் நன்றாக நடந்து கொண்டிருந்தது. தேவன் ஆதாமையும், ஏவாளையும் படைத்து அவர்களுக்கு தேவையான எல்லாவற்றையும் ஏதேன் தோட்டத்திலே வைத்தார். பகலின் குளிர்ச்சியான வேளையிலே தேவன் அவர்களோடு வந்து உலாவுவார். தேவனுடைய படைப்புகளில் மற்ற எல்லா மிருகங்களிலும் புத்திசாலியான சர்ப்பமும் அங்கே தான் வாழ்ந்து கொண்டிருந்தது. சாத்தானும் தன்னுடைய இருதயம் பாவத்தில் நிறையும் வரை தேவ தூதனாக பரலோகத்தில் தேவனுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் சாத்தான், சர்ப்பத்தின் மூலம் ஏவாளிடம், “இந்த தோட்டத்திலுள்ள மரத்தின் கனிகளை தேவன் புசிக்க வேண்டாம் என்று சொன்னது உண்மையா?” என்று கேட்க வைத்தான். அதற்கு ஏவாள், “நாங்கள் தோட்டத்தின் நடுவிலுள்ள மரத்தின் கனியை தவிர மற்ற எல்லா மரத்தின் கனிகளையும் புசிக்கலாம். மேலும், நாங்கள் சாகாதபடிக்கு அந்த மரத்தின் கனியை மட்டும் புசிக்கவோ மற்றும் தொடவோ கூட கூடாது’’ என்று தேவன் கூறியிருக்கிறார்.

“அதை நீங்கள் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்றும் சொன்னார்” என்றாள்.

உடனே சர்ப்பம் ”அது உண்மையல்ல,” என்று மறுத்து விட்டு, “நீங்கள் சாவதில்லை, நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்” என்றது. ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும். புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியை பறித்து, புசித்து தன்னோடு இருந்த தன் புருஷனாகிய ஆதாமுக்கும் கொடுத்தாள். அவனும் அதை புசித்தான். உடனடியாக அவர்கள் தாங்கள் நிர்வாணிகளாய் இருப்பதாய் உணர்ந்தார்கள். அதனால் அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள்.

பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். தேவனுக்கு பயந்ததினால் தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஓடி ஒளிந்து கொண்டார்கள். அப்போது தேவன் “ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?” என்று கேட்டார். ஆதாமுக்கு தான் தேவனுக்கு பதிலளிக்க வேண்டும் என்று தெரியும். எனவே “நான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்திலே கேட்டு, நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளிந்து கொண்டேன்'' என்றான். உடனே தேவன் “நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ?” என்று கேட்டார்.

அதற்கு ஆதாம் “என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன்” என்றான். உடனே தேவனாகிய கர்த்தர் ஏவாளை நோக்கி “நீ இப்படி செய்தது என்ன?” என்றார். ஏவாளோ, “சர்ப்பம் என்னை வஞ்சித்தது. நான் புசித்தேன்” என்று சொல்லி அழுதாள்.

தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை நோக்கி “நீ இதை செய்தபடியால் சகல நாட்டு மிருங்களிலும், சகல காட்டு

மிருங்களிலும் சபிக்கப்பட்டுப்பாய். நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய். உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும், பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்” என்றார். இப்படி கூறுவதின் மூலமாக தேவன் தம்முடைய மற்றும் ஏவாளின் சந்ததியாகிய இயேசுவுக்கும் சாத்தானுக்கு இடையே நடைபெற இருக்கும் யுத்தத்தைப் பற்றி விளக்கியுள்ளார்.

இப்படி மனுகுலத்தின் பாவத்திற்காக இயேசு சிலுவையில் மரித்ததின் மூலம் சாத்தானின் உறுதியான தோல்வியை, இதில் தேவன் வலியுறுத்தியுள்ளார். “நீ அவர் குதிக்காலை நசுக்குவாய்,” என்று தேவன் கூறிய வார்த்தையானது இயேசுவை சிலுவையில் அறைந்ததின் மூலமாக நிறைவேறியதாக சாத்தான் நினைத்தான். தேவன் இயேசு கிறிஸ்துவை உயிரோடு எழுப்புவார் என்பதை அவன் அறியாதிருந்தான். இந்த தோட்டத்தில்தான் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கான முதல் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. தேவன் ஸ்திரீயை நோக்கி “நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன். வேதனையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான்” என்றார். மேலும் “இதுமுதல் கணவனுக்கும், மனைவிக்கும் இடையே யார் பெரியவர் என்ற போராட்டங்கள் இருக்கும். இது என்னுடைய திட்டம் அல்ல, உலகத்தில் பாவம் பிரவேசித்ததினால் இனி உங்கள் வாழ்க்கை இப்படி இருக்கும் என்று உங்களிடம் தெரிவிக்கிறேன்” என்றார்.

பின்பு தேவன், ஆதாமை நோக்கி, “ஏற்கனவே நான் புசிக்க வேண்டாம் என்று தெளிவாக உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்ட படியால், நீ பூமிக்குத் திரும்பும் மட்டும் உன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிப்பாய், நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்கு திரும்புவாய்” என்றார்.

தேவன் சில மிருகங்களை கொன்று அவற்றின் தோலினால் உடைகளை உண்டாக்கி மனுஷனுக்கும், அவன் மனைவிக்கும் உடுத்தினார். இந்த செயல் இயேசு பிற்காலத்தில் மனுகுலத்தின் பாவத்தை தன்னுடைய இரத்தத்தினால் நீக்குவதற்கு அடையாளமாக இருக்கிறது. பின்பு தேவனாகிய கர்த்தர், இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல ஆனான். இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்கு செய்ய வேண்டும் என்று அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார். ஜீவ விருட்சத்துக்கு போகும் வழியை காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கு கிழக்கே கேருபீனையும், வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.

ஆதாமும், ஏவாளும் தாங்கள் வசிப்பதற்கு ஒரு இடத்தை தெரிந்து கொண்டு, தங்கள் ஆகாரத்திற்காக நிலத்திலே பயிர்களை விளையச் செய்தார்கள். இவ்வாறு தங்கள் குடும்பத்தை ஆரம்பித்தார்கள்.

இந்த பாடம் நமக்கு மிகவும் முக்கியம். ஏனென்றால் நம்முடைய முதல் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் தேவன் தங்களுக்கு அளித்த தேர்ந்தெடுப்புக்கு எப்படி பதிலளிக்கிறார்கள் என்று விளக்குகிறது. தேவனுடைய திட்டத்திற்கு கீழ்படிவதற்கோ அல்லது தங்களுடைய சுய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கோ, அவர், அவர்களுக்கு சுயாதீனம் அளிந்திருந்தார். தேவனுக்கு ஆதி முதல் இயேசுவின் மூலமாக மனுகுலத்திற்கு இரட்சிப்பை அளிக்க வேண்டும் என்ற திட்டம் இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு இந்த பாடம் உதவி செய்கிறது. முதல் மனிதனுக்கும் மனுஷிக்கும் தேவன் பூரணமான உலகத்தை கொடுத்திருந்தும் அவர்கள் தேவனுக்கு விரோதமாக பாவத்தை தெரிந்து கொண்டு தங்கள் சுய வழியிலே போனார்கள்.

நம் அன்பான தேவன் தம்முடைய மக்களை திரும்பவும் தம்முடைய உறவிலும் ஐக்கியத்திலும் கொண்டு வர எப்படி வேலை செய்கிறார் என்பதை மீதியான அவருடைய வார்த்தைகள் நமக்கு காட்டுகிறது.

நாம் இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிப்போம்

1. ஆதாமும், ஏவாளும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்த பின் என்ன பதிலளித்தார்கள்?A.(6 வினாடிகள் நிற்கவும்)

ஆதாம், ‘‘நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து, ஒளிந்து கொண்டேன்’’ என கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. இயேசு கிறிஸ்துவின் வருகையை குறித்து, ஸ்திரியினுடைய வித்துக்கு, தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? A.(6 வினாடிகள் நிற்கவும்) ‘‘அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலை நசுக்குவாய்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. தேவன் சில மிருங்களை கொன்று அவற்றின் தோலினால் உடைகளை உண்டாக்கி அதை ஆதாமுக்கும், ஏவாளுக்கும் உடுத்தியது ஏன் முக்கியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? A.(6 வினாடிகள் நிற்கவும்)

‘‘இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும், அவருடைய இரத்தம் சிந்துதலின் மூலம் நம்முடைய பாவங்கள் நிவர்த்தி செய்யப்படுவதற்கும் அடையாளமாக இருக்கிறது’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

4. எப்படி தேவன், ஆதாமையும், ஏவாளையும் தண்டித்தார்?A.(6 வினாடிகள் நிற்கவும்) ‘‘அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே அனுப்பி அதற்கு கேருபீனை காவலாக வைத்தார்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

மனுக்குலம் கீழ்படியாமல் பாவம் செய்தாலும் தேவன் அவர்கள் தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்தார் என்பதை இந்த பாடம் நமக்கு விளக்குகிறது.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில்

வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

தேவன், சாத்தானை தோல்வியுறச் செய்யவும், இயேசுவை விசுவாசிக்கிற அனைவருக்கும் இரட்சிப்பை வழங்கவும் ஏற்கனவே திட்டமிட்டிருந்தார். தோல்வி மற்றும் வீழ்ச்சியின் மத்தியிலும் தேவன் நம்பிக்கையை அளிக்கின்றார். இதை போன்ற தோல்வியின் மத்தியிலிருக்கும் யாராவது ஒருவரை கண்டுபிடித்து அவருக்கு முதல் மனிதன் மற்றும் முதல் மனுஷியை பற்றிய பாடத்தை கற்றுக் கொடுங்கள்.

அவர்களிடம் சாத்தானின் போராட்டத்திலிருந்து விடுதலையை கொண்டு வர உங்களுக்காக ஜெபம் செய்யட்டுமா என்று கேட்டு ஜெபிக்கவும்.

பாடம் முடிந்தது